செ.வெ.எண்: 70 27/1/2012

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள், சமூகப் பாதுகாப்புத் துறை அலுவலர்களை இன்று ஆய்வு செய்தார். இத்துறையின் கீழ் அன்பும் அரவணைப்பும் தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் ஒழுக்க நெறி பிறழ்தல் சட்டத்தின் கீழ் மீட்கப்படும் பாதிப்பிற்குள்ளான பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்கு உடை, உணவு, உறைவிடம், கல்வி, பராமரிப்பு, சமூக உளவியல் ரீதியான சேவைகள் மற்றும் மறுவாழ்விற்கான வாழ்வாதாரப் பயிற்சிகள் மற்றும் தொழில் பயிற்சிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. இதற்காக, இத்துறையின் கீழ் சிறுமியர் மற்றும் சிறுவர்க்காக 30 குழந்தைகள் இல்லங்கள், 8 கூர்நோக்கு இல்லங்கள், 2 சிறப்பு இல்லங்கள், 3 பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் 5 மகளிர் பாதுகாப்பு இல்லங்கள் என 35 நிறுவனங்கள் அரசாலும், 37 நிறுவனங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலமாகவும் மொத்தம் 72 நிறுவனங்கள் செயல்படுகின்றன.

இத்துறையின் கீழ் 16 குழந்தைகள் நல குழுக்கள் மற்றும் 8 இளைஞர் நீதி குழுமங்கள் செயல்படுகின்றன. இவற்றின் பணிகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் (சமூகநலம்) அவர்கள் ஆய்வு செய்தார். இத்துறையின் மூலம் மைய அரசின் உதவியுடன் துன்பத்தில் உள்ள பெண்களுக்கு உறைவிடம், தொழில் பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்கி அவர்களை சுயமாகவும், தன்னதிகாரம் படைத்தவர்களாகவும் உருவாக்க செயல்படும் 13 சுவதார் இல்லங்களது செயல்பாடுகள் மற்றும் வணிக நோக்கத்திற்காக கடத்தப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளை மீட்டுதல் மற்றும் அவர்களது மறுவாழ்விற்காக உதவும் உஜ்ஜவாலா திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

போதைத் தடுப்புத் திட்டம், குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி உதவித் திட்டம், இதன் கீழான 1098 இலவச அழைப்புச் சேவை, சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் பல்வேறு இல்லங்களின் சேவை, தரம், பணியமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு பகுதி–II திட்டங்கள், நிதிநிலை அறிக்கையின் கீழான திட்ட அறிவிப்புகள், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளின் முன்னேற்றம் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்தார்.

இவ்வாய்வில் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலர் / இயக்குநர் திரு.அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., மற்றும் அத்துறை அலுவலர்கள், நிறுவனங்களின் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9